நாகப்பட்டினம் நகராட்சி

**2021–ம் ஆண்டு ஜீன் மாதம் – 30 –ம் நாள் புதன் கிழமை காலை 11. 00 மணியளவில் நடைபெற்ற நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 30–06–2021 | பொருள் எண்.1<br>நாகப்பட்டினம் நகராட்சி பகுதிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக வன்முறை நடைபெறும் இருட்டான பகுதிகள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூரான இருட்டான பகுதிகளை கண்டறிந்து அப்பகுதிகளில் புதியதாக 20 எண்ணிக்கை மின் விளக்குகள் அமைப்பதற்கு நிர்பயா திட்டத்தின் கீழ் ரூ.20.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் சென்னை அவர்களின் அலுவலக கடிதம் எண்.TUFIDCO/Nirbhaya Fund/915(B)2019 Date.26.04.2021ல் கோரப்பட்டது. மேற்படி கடிதத்தின் வழிகாட்டுதலின் படி ரூ.20.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அலுவலகத்திற்கு TUFIDCO கருத்துரு அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2172/2021/இ1 | தீர்மானம் எண். 65<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2021 | பொருள் எண்.2<br>நாகப்பட்டினம் நக்ராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று பரவுதலை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களால் செல்லூர் சாலையில் உள்ள எரிவாயு தகன மேடையினை ஆய்வு செய்து உடன் பயன்பாட்டிற்கு கொண்டு வர நேரடியாக அறிவுறுத்தியதற்கிணங்க எரிவாயு தகன LPG Gas மேடையினை தகனமேடையாக மாற்றம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பணிகள் முடிக்கப்பட்டது, மேற்படி தகனமேடைக்கு தேவையான 10 எண்ணிக்கை LPG Gas வாங்குவதற்கும் அதற்கான வைப்பு தொகை ரூ.17,000/– மற்றும் சிலிண்டருக்கான தொகை ரூ.16,310/– ஆக மொத்தம் ரூ.33,310/– மட்டும் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலககுறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. கேஸ் சிலிண்டர் வாங்குவதித்ன அவசர அவசியத்தினை முன்னிட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி செலவினங்கள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலகநடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. இச்செலவினத்தினை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.13201/2006/இ1 | தீர்மானம் எண். 66<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2021 | பொருள் எண்.3<br>மாவட்ட சுற்று சூழல் பொறியாளர் மாசுகட்டுப்பாட்டு வாரியம் நாகப்பட்டினம் அவர்களின் 12.04.2021 தேதிய கடிதத்தில் நாகப்பட்டினம் நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நாகப்பட்டினம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு இயக்குவதற்கானதடையின்மை சான்றுக்குரிய Water Act கட்டணம் ரூ.110040/–Air Act கட்டணம் ரூ.110040/– ஆக மொத்தம் ரூ.220080/– மட்டும் District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Nagapattinam என்ற பெயரில் வங்கி வரைவோலையாக வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதன் படி மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்படி செலவினத்தினை நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கொள்ளவும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க | தீர்மானம் எண். 67<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.11274/1999/இ1 | |
| 30–06–2021 | பொருள் எண்.4<br>நாகப்பட்டினம் நகராட்சி பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் TN 51 F 6091 02-02-2011 ல் வாங்கப்பட்டது 10 ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்டதாலும், அந்த வாகனத்திதற்கு பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் செலவினம் அதிகமாக உள்ளதாலும், மேற்படி வாகனத்தை கழிவு செய்து விட்டு நகராட்சிக்கு புதிதாக ஒரு ஈப்பு வாகனம் நகராட்சி பொது நிதியிலிருந்து வாங்கிட உரிய முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு,<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழுங்கலாம்<br>2 ஈப்பு வாகனம் வாங்குவதற்கான செலவினத்தினை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.1353/2021/இ1 | தீர்மானம் எண்.68<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2021 | பொருள் எண்.5<br>மாவட்ட சுற்று சூழல் பொறியாளர் மாசுக்கட்டுபாட்டு வாரியம் நாகப்பட்டினம் அவர்களின் F.NPM0604/RS/DEE/TNPCB/NPM/2021 எண்ணிட்ட 25–06–2021 தேதிய கடிதத்தில் நாகப்பட்டினம் நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நாகூர் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு இயக்குவதற்கான தடையின்மை சான்றுக்குரிய Water Act கட்டணம் ரூ.21800/– Air Act கட்டணம் ரூ.21800/– ஆக மொத்தம் ரூ.43600/– மட்டும் District Environmental Engineer Tamil Nadu Polluction Control Board Nagapattinam. என்ற பெயரில் வங்கி வரைவோலையாக வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதன் படி மேற்படி தொகையினை வழங்க மன்றத்திதன் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழுங்கலம்.<br>2 மேற்படி செலவினத்தினை நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கொள்ளவும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3 இச்செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.1312/2021/இ1 | தீர்மானம் எண்.69<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 30–06–2021 | பொருள் எண்.6<br>நவீன எரிவாயு தகன மேடை பகுதி II திட்டத்தில் 2006–07 ஆம் ஆண்டு ரூ 60.00 மதிப்பீட்டுத் தொகையில் மதுரையை சேர்ந்த M/S ஜீவாலா எக்யூப்மெண்ட் கன்சல்டன்சி, என்ற ஒப்பந்த நிறுவனத்தால் கட்டப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண். 36 நாள் 31.01.2011 ன் படி தகன மேடை பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு நாகப்பட்டினம் நகர வளர்ச்சி அறக்கட்டளை மேனேஜிங் டிரஸ்ட் நாகப்பட்டினம் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது.<br>இதன் பின்பு கடந்த 15.11.2018 அன்று வீசிய கஜா புயலினால் எரிவாயு தகன மேடை கட்டிடம் மற்றும் உபகரணங்கள் பலத்த சேதமடைந்து விட்டது. இதனால் தொடர்ந்து பயன்படுத்த இயலாத நிலை ஏற்பட்டு விட்டது. தற்போது கொரோனா தொற்று பரவுதலை முன்னிட்டு பயன்பாடற்று இருந்த எரிவாயு தகன மேடையினை உடன் பயன்பாட்டிற்கு கொண்டு வர மாவட்ட ஆட்சியர், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க LPG Gas தகனமேடையாக மாற்றம் செய்யும் பணி மேற்கொள்ள அவசர அவசியத்தினை முன்னிட்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் 19.05.2021 ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டு SANTHOSH CHARITABLE TRUST, No 16G Pidarikulam Road, Kumbakonam என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக பணி உத்தரவு ந.க எண் 455/2020/இ1 நாள் 24.05.2021ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது.<br>தற்போது கெரோனா–2019 முழு ஊரடங்கு நடைமுறையில் உள்ளதால் ஒப்பந்தபுள்ளிகள் கோரிட இயலாத காரணத்தினாலும், கொரோன தொற்று பரவுதல் காரணமாக கால அவகாசம் போதுமானதாக இல்லாமல் இருந்த நிலையில் மேற்படி, பணியை மேற்கொண்ட SANTHOSH CHARITABLE TRUST, No 16G Pidarikulam Road, Kumbakonam என்ற நிறுனம் தனது விண்ணப்பம் நாள் 11.06.2021 தகனமேடையினை பராமரிப்பு மேற்கொள்ளவும், எரியூட்டுவதற்கும் மற்றும் அடக்கம் செய்வதற்கும் ஒரு சடலத்திற்கு ரூ.3500/– சம்பந்தப்பட்டவர்களிடம் பெற்றுக்கொண்டு அதில் ரூ.300/– நகராட்சியில் செலுத்திவும் சம்மதம் தெரிவித்தும், மேலும் நகராட்சியின் | தீர்மானம் எண்.70<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

நிபந்தனைக்குட்பட்டு 2021 முதல் 2024 வரை மூன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்க கோரப்பட்டது.

மேலும் பரிசீலனை செய்யப்பட்டதில் பொதுமக்களின் நலனை முன்னிட்டு ஒரு சடலம் எரியூட்டுவதற்கு ரூ.2900/– மற்றும் அடக்கம் செய்வதற்கு ரூ.1500/– பெற்றுக்கொள்ளவும் அதில் சடலம் ஒன்றுக்கு ரூ.300/– நகராட்சியின் கருவூலத்தில் செலுத்திடவும் கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு உரிமம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**நிபந்தனைகள்**

1. தகன மயானக் காரியங்கள், இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்த காரியங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. எந்த சட்ட விரோதமான நிகழ்ச்சிகளும் அங்கு நடை பெற அனுமதிக்க இயலாது.
2. இறப்பு விவரங்களை பதிவேடுகளிலும், கணிணியில் பதிவு செய்து அதன் விவரத்தினை உரிமம்தாரர் நகராட்சிக்கு தெரிவிக்க வேண்டும் இறப்பு விவரங்களை பதிவு செய்ய உரிய படிவங்கள் வழங்கப்பட வேண்டும்.
3. ஒலி,ஒளி பெருக்கிகளை பயன்படுத்த கூடாது. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக நகராட்சி ஆணையர், அவ்வப்போது விதிக்கும் விதிமுறைகளுக்கும், ஆலோசனைகளுக்கும், இதர விதிமுறைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.
4. மேற்படி இடத்தில் உள்ள பொருள்கள் களவாடப்பட்டாலோ அல்லது எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விலைவிக்கப்பட்டாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே முழு பொறுப்பாகும்.
5. எரியூட்டும் இயந்திர புகைபோக்கிகள், புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையில் தக்க உயரத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைப்படி பராமரிக்கப்பட வேண்டும்.
6. தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி தேவைப்படும் என கருதும் பட்சத்தில் மேற்படி அனுமதி மற்றும் தடையில்லா சான்று நகராட்சி மூலம் தனது சொந்த பொறுப்பில் பெற்று கொள்ள வேண்டும்.
7. தகன மேடை கட்டிடத்திற்கு உண்டான மின் கட்டணத்தினை பராமரிக்கும் நபரே நகராட்சி மூலம் செலுத்தப்பட வேண்டும் மின் இணைப்பு நகராட்சி ஆணையர் பெயரிலேயே இருக்கவேண்டும்.
8. நவீன மயானத்தை பயன்படுத்துபவர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை மூன்று ஆண்டுகளுக்கு பின்பு மன்ற தலைவர்/ஆணையாளர்,பொறியாளர், சுகாதாரபிரிவு அலுவலர் தங்களது அமைப்பை சார்ந்த ஒருவர் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்க வேண்டும். இக்கட்டணம் இலாப நோக்கமின்றி செலவுகளை சரிகட்டும் விதமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.
9. ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொதுவான எரிவாயு தகன மேடை மயானமாக பயன்படுத்த வேண்டும்.
10. தகன மேடை மயானத்தை சுற்றி தோட்டம் அமைத்தல் , செடி, மரங்களுக்கு தண்ணீர் ஊற்றி பராமரித்தல் செந்த பொறுப்பில் ஏற்க வேண்டும்.
11. தகனமேடை மயானத்தில் தங்கள் நிறுவனம் மூலமாக எவ்வித கூரைவேய்ந்த கட்டிடமோ அல்லது எளிதில் தீ பற்றக்கூடிய பொருள்கள் கொண்டு கூரையோ கண்டிப்பாக அமைக்கக்கூடாது.
12. எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்ட பிரச்சனைகளுக்கு சம்மந்த பட்ட நபர்களும் SANTHOSH CHARITABLE TRUST பொறுப்பேற்க வேண்டும்.
13. முதன் முதலில் பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். நீட்டிப்பு தேவைப்படின் 6 மாத காலத்திற்கு முன்பாகவே விண்ணப்பிக்க வேண்டும்.
14. நவீன எரிவாயு தகன மயானத்தை பராமரிப்பு பணிகளை கண்காணிக்க நிர்வாகிக்க கீழ்கண்ட உறுப்பினர்களை கொண்டு கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நகராட்சி ஆணையர் | நாகப்பட்டினம் | தலைவர் |
| நகர் நல அலவலர் | நாகப்பட்டினம் | துணைத்தலைவர் |
| நகராட்சி பொறியாளர் | நாகப்பட்டினம் | செயலாளர் |
| துப்புரவு ஆய்வாளர்–1 | நாகப்பட்டினம். | உறுப்பினர் |
| துப்புரவு ஆய்வாளர் –2 | நாகப்பட்டினம். | உறுப்பினர் |
| நகரமைப்பு ஆய்வாளர் | நாகப்பட்டினம். | உறுப்பினர் |

15. பராமரிப்பு அனுமதியை புதிப்பிப்பதும் மறுப்பதும் நகராட்சியின் முடிவை பொறுத்து அனுமதி மறுக்கப்பட்டால் தாங்கள் நிறுவிய அசையா அனைத்து

கூடுதல் உபகரணங்கள் கட்டிடங்களுக்கும் எந்தவித இழப்பும் நேராமல் பணி அனுமதி முடிவுற்ற பிறகு திரும்பி ஒப்படைக்கும் போது எவ்வித இழப்பீடும் நகராட்சி வழங்காது.

16. பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட பிறகு கூடுதல் கட்டணம் ஏதும் தேவைப்படின் நகராட்சி அனுமதி பெற்ற வேலைகள் மட்டுமே செயல் படுத்த வேண்டும். பராமரிப்பு அனுமதி முடிவுற்ற பிறகு திரும்பி ஒப்படைக்கும் போது இதற்கு எவ்வித இழப்பீடும் நகராட்சி வழங்காது.
17. பராமரிப்பு பணிகளை நிறுத்திக் கொள்ள விரும்பினால் நகராட்சிக்கு 6 மாத காலத்திற்கு முன்பே நகராட்சிக்கு சரியான காரணத்துடன் கடிதம் மூலம் வழங்க வேண்டும்.
18. நகராட்சி தேவைக்கு எப்போது திரும்ப ஒப்படைக்க கோரினாலோ எந்த விதமான ஆட்சேபனை இன்றியும் எந்த விதமான நஷ்ட ஈடு தொகை கோராமலும் நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்.
19. தகன மேடை மயான பராமரிப்பு உரிமம் பெற்ற தங்கள் அமைப்பு இறந்தவரின் பெயர், தகப்பனார்/ தாயார் பெயர், வயது, முகவரி எரிவாயு மேடையில் எரியூட்டப்பட்ட நாள், பெறப்பட்ட தொகை முதலிய விவரங்கள் அடங்கி பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.
20. எரியூட்டு மயான பராமரிப்பு பணிகள் கண்காணிக்கும் குழு நிர்ணயிக்கும் தொகையை எரியூட்டப்படும் சடலத்திற்கு கட்டணமாக வசூலிக்க வேண்டும். மின் கட்டணம் மற்றும் குடிநீர் வழங்குதல் ஆகியவற்றிற்காக நகராட்சிக்கு ஆகும் செலவு கூடுதலாகும் பட்சத்தில் நகராட்சியும் எரியூட்டு எரிவாயு மயான டிரஸ்ட்டும் சேர்ந்து நகராட்சி நிதி நிலை பாதிக்காத வகையில் மேற்படி கட்டணத்தை மறு நிர்ணயம் செய்து வசூலிக்க வேண்டும்.
21. எரிவாயு மூலம் எரியூட்டப்படும் ஒரு சடலத்திற்கு தங்கள் அமைப்பினால் வசூலிக்கப்படும் தொகையில், ரூ.300/– நகராட்சிக்குரிய கட்டணமாக பிரதி திங்கள் கிழமை தேறும் நகராட்சி கருவூலத்தில் செலுத்தி அதன் விவரத்தை நகராட்சிக்கு தெரிவிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் எந்தவித முன் அறிவிப்பின்றி உரிமம் ரத்து செய்யப்படும்.
22. பராமரிப்பு காலத்தில் கணக்குகளை ஒவ்வெரு நிதியாண்டு முடிந்தவுடன் அடுத்த ஒரு மாத காலத்திற்குள் தணிக்கை பட்டய கணக்காளர் (சார்ட்டாடு அக்கவுண்ட்ன்ட்) மூலம் தணிக்கை செய்ய வேண்டும்.
23. மாத வாடகை , முன்பணம் ஏதும் செலுத்த வேண்டியது இல்லை.
24. மேற்கண்ட நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையானது மீறப்பட்டலோ அல்லது புகார்கள் நிரூபிக்கப்பட்டாலோ வழங்கப்பட்ட உரிமம் ரத்து செய்யப்படும். நஷ்ட ஈடும் கோராமல் தகன மேடையை இயக்கும் நிலையில் நகராட்சி வசம் ஒப்படைக்க கட்டுப்பட வேண்டும்.

25. இவ்வுத்தரவு கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் தங்களது பராமரிப்பு இயக்கத்தில் திருப்தி இல்லை எனில் நகராட்சி நிர்வாகம் கருதினால் எவ்வித அறிவிப்பும் இன்றி இவ்வுத்தரவு ரத்து செய்யப்படும்.
26. நகராட்சி மயானம் மற்றும் எரிவாயு தகன மேடைக்கு வருகின்ற நகராட்சிக்குட்பட்ட ஆதரவற்ற சடலங்கள் /கொரோனா 19 தொற்றால் இறந்த அனாதை சடலத்திற்கு கட்டணமில்லாமல் சேவை புரிதல் வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் ஜீன் மாதம் 30ம் தேதிக்குள் உரிமம் புதுபித்தலுக்கான விண்ணப்பம் தரவேண்டும்

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலம். |
| | 2 | எரிவாயு தகன மேடையின் பயன்பாட்டின் அவசியம் மற்றும் அவசரம் கருதியும் நகர மக்களின் நலனை முன்னிட்டும், மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்கள் மேற்படி, தகன மேடையினை உடன் பயன்பாட்டிற்கு கொண்டுவர தெரிவிக்கப்பட்டதற்கிணங்க மேற்கண்ட நிபந்தனைகளுடன் தகன மேடையை பராமரிப்பதற்கு M/S SANTHOSH CHARITABLE TRUST, No 16G Pidarikulam Road, Kumbakonam என்ற நிறுனம் அளித்துள்ள விண்ணப்பத்தை ஏற்று உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3 | கொரோன –2019 அவசர அவசியத்தை முன்னிட்டு நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் உத்தரவு வழங்கிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும், மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | ந.க.எண்.13201/2006/இ1 | | | |

//உண்மை நகல்//

(ஒம்) பி,ஏகராஜ்
ஆணையர் மற்றும் தனிஅலுவலர்